MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சிலப்பதிகாரத்தில் வழிபாட்டுச் சிந்தனைகள்

**ஆய்வாளர்**

**செல்வி.பூ.செல்வராணி,**
தமிழ் இலக்கியம் முதுகலை இரண்டாம் ஆண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்

**நெறியாளர்**

**திருமதி. அ.பாவை,**
தமிழ்த்துறை துறைத்தலைவர் மற்றும்
உதவிப் பேராசிரியர்,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

# Religious and devotional ideas in Silappathikaram

**RESEARCHER**

**Selvi.P. Selvarani,**

Second Year, Master of Arts in Tamil Literature,
Sakthi Women's Arts and Science College,
Oddanchatram, Dindigul District.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**GUIDE NAME**

**Mrs. A. Pavai,**

Head of the Department of Tamil and Assistant Professor,
Sakthi Women's Arts and Science College,
Oddanchatram, Dindigul District.
Cell No:9994176424

**Abstract**

Silappathikaram is a unique epic that holds a distinctive place in the history of Tamil literature. Composed by Ilango Adigal, this epic is a great work that integrates and portrays the life and sorrows of a virtuous woman, along with social justice, political ethics, and religious sentiment.

The devotional thoughts expressed in this epic help us understand the ancient religious practices of the Tamils, their belief in deities, nature worship, chastity worship, and hero-stone worship. The purpose of this article is to examine the locations of the temples and shrines mentioned in Silappathikaram and the methods of worship that took place there.

## முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் ***சிலப்பதிகாரம்*** தனித்துவமான இடத்தைப் பெற்ற இரட்டைக்காப்பியமாகும். இளங்கோவடிகள் இயற்றிய இக்காப்பியம், ஒரு கற்புடைய பெண்ணின் வாழ்வியல் துயரையும், சமூக நீதி, அரசியல் அறம், சமய உணர்வு ஆகியவற்றையும் ஒருங்கிணைத்துச் சொல்லும் மாபெரும் படைப்பாகும். இக்காப்பியத்தில் வெளிப்படும் **வழிபாட்டுச் சிந்தனைகள்** தமிழரின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பண்டைய சமயநிலை, தெய்வ நம்பிக்கை, இயற்கை வழிபாடு, கற்பு வழிபாடு, நடுகல் வழிபாடு போன்றவற்றை அறிய உதவுகின்றன. சிலப்பதிகாரத்தில் சுட்டப்பெறும் கோயில்கள், கோட்டங்கள் ஆகியவற்றின் இருப்பிடத்தையும், அங்கு நிகழ்ந்த வழிபாட்டு முறையையும் ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## திறவுச்சொற்கள்

வழிபாடு, சிலப்பதிகாரத்தில் சமயப் பன்மை, நாட்டார் வழிபாடு, வேட்டுவ வரியில் பலி, சிவ வழிபாடு, கோயில் வழிபாடும் கோட்ட வழிபாடும் ஆகியவை ஆகும்.

## வழிபாடு

வழிபாடு என்பது ஒவ்வொரு மத முறையில் கடவுளை போற்றி துதிப்பது, பாடல்கள் பாடுவது, அந்த அந்த கடவுளின் முறைகளை பின்பற்றுவது தான் வழிபாடு. இதில் அவரவர் விருப்பப்படி வழிபாட்டு முறைகள் மாறுபடும். மௌனமாகவும் அந்த கடவுளை மனமுருகி வழிபாடு செய்யலாம். சத்தம் போட்டும் கத்தி என் போல பாட்டு பாடியும் வழிபாடு செய்யலாம். நம்ம சந்தோஷம், நம்ம மகிழ்ச்சி இதனுடன் சுத்தி இருப்பவர்களுக்கும் பிரச்சினை தராம இருக்கணும். தன் கருமமே கண்ணாக இருப்பதும் அதாவது யாருக்கும் தீங்கு விளைவிக்கும் எண்ணம் இன்றி தன் வேலையை பார்ப்பதும் சிறந்த ஒரு வழிபாடுதான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## சிலப்பதிகாரத்தில் சமயப் பன்மை

சிலப்பதிகாரம் ஒரு குறிப்பிட்ட சமயத்தை மட்டுமே போற்றாத **பன்மைச் சமய நூல்** ஆகும். இதில்,

- சைவம்
- வைணவம்
- சமணம்
- புத்தம்
- நாட்டார் வழிபாடு

எனப் பல சமய சிந்தனைகள் இணைந்து காணப்படுகின்றன.

**“அறவோர் பள்ளியும்**
**புறவோர் பள்ளியும்**
**மறவோர் பள்ளியும்**
**வளம்பெற நின்றன”**

என்ற பாடல் வரிகள், சமய ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன.

## சிலப்பதிகாரத்தில் நாட்டார் வழிபாடு

சிலப்பதிகார வேட்டுவரியில் நாட்டார் வழிபாட்டு மரபுகள் சுட்டப்பட்டுள்ளன. இப்பகுதி பாலைநில மக்களான எயினர்களின் வழிபாட்டு மரபினைக் கூறுகிறது. இக்காதையின் தொடக்கப்பகுதியே மக்களை அறக்குடியினர், மறக்குடியினர் என இரண்டாகப் பகுக்கிறது. (சிலப்.ப.180) இதிலும் மறக்குடியினரின் அடுதல் வாழ்வு சுட்டப்பட்டுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மட்டுஉண் வாழ்க்கை வேண்டுதீர் ஆயின் எனும் வரி போரின் விளைவாய் எழும் கொள்ளைப் பொருட்களைப் பெற விரும்புவீராயின் உடனடியாகக் கொற்றவைக்குப் பலி கொடுத்து அவளைத் திருப்தி செய்தல் அவசியம் எனக் கூறுகிறது. வேட்டுவ வரியின் இப்பகுதியை லெவிஸ்ட்ராசின் அமைப்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்ந்தால் இயற்கை பண்பாடு எனும் எதிரிணை செயல்பட்டிருப்பதை அறியலாம் இங்கு உணவுத் தேவையும் வாழ்வியல் போராட்டங்களுமே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. வெட்சி மலர்சூடி ஆநிரை கவர முற்படுதல் கல் விலை கொடுக்க இயலாத தலைவன் போருக்குச் செல்ல கொற்றவை துணையிருத்தல். அதனால் ஏற்படும் போர்விளைவுகள், பலன்கள் கொற்றவையால் ஏற்படல் எனும் கருத்துக்கள் செல்வ வளம் பெறல் எனும் பண்பு மட்டுமன்றி தனது நிகழ்கால வாழ்க்கையை நல்லமுறையில் நடத்த எண்ணும் எண்ணமே வெளிப்படக் காணலாம்.

**வேட்டுவ வரியில் பலி**

இயற்கையின் தன்மையிலிருந்து விடுபட்டுப் பண்பாட்டின் தன்மையைப் பெறுவது என்பது பலி படையிடுதல் என்னும் தளத்தோடு உறவுகொண்டுள்ளது பக்தவத்சல பாரதி) .2002, ப.244) சிலப்பதிகாரத்தில் கொற்றவை பலிகேட்கும் நிலையும் எயினர்கள் தாங்களாகவே தங்களைப் பலிகொடுக்கும் நிலையும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. இந்நிலை இயற்கை பண்பாடு எனும் தளத்தில் இயற்கை விழைவிற்கான உணர்வாகக் கருதலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தாவரப் பலி கொடுத்தல் என்பது பண்பாட்டு விழைவின் பாற்பட்டது எனும் கருத்தாக்கம் உள்ளது. பலிபீடத்தைச் சுற்றி மலர்ப்பலி கொடுக்கும் எயினர்களின் செயல் இதனைக் குறிக்கின்றது . புன்னை, நரந்தை, ஆச்சா, சந்தனம், வேங்கை (மலர்), இலவம்பூக்கள், வெண்கடம்பம், பாதிரி, புன்னை, குரவம், கோங்கம் முதலியன பலிபீடத்தின் முன்றிலில் நிறைந்துள்ளன .ப.சிலப்)185) எனும் பகுதி பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதைக் காணலாம் . வேட்டைச் சமூகத்தில் உயிர்ப்பலி என்பது ஒன்று வாழ மற்றொன்றைக் பக்தவத்சல பாரதி) கொல்லுதல்2002. ப.245) எனும் செயலின் அடிப்படையில் அமைந்துள்ளது .

“அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது
மிடறு உகு குருதிகொள்தரு விறல்தரு விலையே”
“கணநிறை பெறுவிறல் எயின் இரு கடன் இது
நிணன் உகு குருதி கொள்நிகர் அடு விலையே”

கொற்றவை தந்த வெற்றியின் விலையாகத் தங்களையே பலிகொடுக்கும் தன்மை எயினர்களிடம் காணப்படுகிறது என அறியலாம்.

**வேட்டுவ வரி சுட்டும் வழிபாட்டுச் சடங்கு முறைகள்**

நாட்டார் தெய்வங்கள் நிறையற்ற இடத்தைக் கொண்டுள்ளன . இத்தெய்வங்களின் இருப்பு நிலையற்றது எங்கும் தோன்றுவதும் பக்தவத்சல பாரதி)2002 ப.242). ஊரின் நடு மன்றத்தில் சாமியாடிக்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

கொற்றவைக்குப் பலி வேண்டும் எனக் கேட்கின்றாளஅதனைத் . .தொடர்ந்து .வழிபாட்டுச் சடங்குகள் தொடங்குகின்றன சாமியாடிகளின் இத்தகைய நிலையின் அடிப்படையில் நாட்டார் சமயத்தில் இயல்பினைக் கட்டமைக்கிறார்நாட்டார் தெய்வங்களை வழிபடும் . எய◌ினர்களின் சடங்கினைப் பிரித்தல் சடங்கின்வழி விளங்கலாம் . வேட்டுவ வரியில் பெண் ஒருத்திக்குத் தெய்வ வேடமிடுதலைப் பிரித்தல் .சடங்காகக் கொள்ளலாம் தொல்குடிக்குமரி ஒருத்திக்கு கொற்றவையின் வேடம் அமைக்கும் முறையாகத் தலைமுடியைப் பாம்புபோல் பிரித்துக்கட்டுதல், பண்றியின் வெண்பல்லைத் தலையில் கட்டுதல், புலிப்பல் தாலி அணிவித்தல், புலித்தோலை இடையில் மேகலையாய் உடுத்துதல், வில்லைக் கையில் கொடுத்தல், கலைமானின் மேல் அமர வைத்தல் முதலான சடங்குச் செயல்கள் எல்லாம் பிரித்தல் சடங்கு )Seperation rites) எனும் செயலாகக் கருதலாம்இதன் . த◌ொடர்ச்சியாக நிகழும் சாலினி கொற்றவையாய் மாறலும், கொற்றவை கூறுதலும் நிலைமாற்றுச் சடங்கு )Transitional rites) எனும் பிரிவில் அடக்கலாம். இத்தகையச் சடங்கு நிகழ்வுகளே

உலகப் பொதுமையானது என்பர்.

## வைதீக வழிபாடுகள்

வஞ்சிக்காண்டத்தில் கண்ணகியின் வழிபாட்டு நிலை வைதீக வழிபாடுகளாக நிகழ்த்தப்படுகின்றனகால்கோட்காதை .,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை எனும் 4 காதைகளில் வைதீகச் சடங்கு முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போக்கினைக் காணலாம்கோட்டம் அமைத்தல் ., தெய்வப்படிவம் சமைத்தல், பூப்பலி கொடுத்தல், காப்புக்கடை நிறுத்தல், வேள்வியும் விழாவும் செய்தல் எனும் இவை வைதீகம் சார்ந்தனவாகக் காணப்படுகிறதுவரந்தரு காதையின் இறுதிப்பகுதியில் .,

“பரிவும் இடுக்கணும் பாங்குறநீங்குமின்”

எனும் பகுதிகளில் சமண சமயக் கருத்துக்களோடு வைதீகக் கருத்துக்கள் இணைக்கப்படுவதைக் காணலாம்.

**சிவ வழிபாடு**

சிவ வழிபாடு என்பது சிவனெறி ஆகும். இதனைச் சைவநெறி என்றும் கூறலாம். சைவம் என்ற தொடர் சிவனோடு தொடர்புடையது என்னும் பொருளைத் தரும். சைவம் சிவனுடன் சம்பந்தமாவது (திருமந்திரம், 1486) என்று திருமூலர் கூறுகிறார். எனவே தான் சிவநெறியை சைவநெறி என்றும் சைவ சமயம் என்றும் சுருக்கமாகச் சைவம் என்றும் குறிப்பிடுகிறோம்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டு புறப்படுகிறான். எல்லாப் பணிகளையும் முடித்த பிறகு வஞ்சி மாநகரில் எழுந்தருளியுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று யாருக்கும் வணங்காத

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தன் முடியைத் தாழ்த்தி வணங்கிவிட்டு யானைமேல் ஏறுகிறான். அந்த நிலையில் ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்த திருமாலை வழிபடவேண்டும் என்று அவன் நினைக்கவில்லை.

யானைமேல் ஏறிவிட்ட பிறகு திருமால் கோயில் பிரசாதத்தைச் சிலர் ஏந்தி வருகின்றனர். அதைப் பெற்றுக் கொண்ட அவன் சிவபெருமானுடைய திருவடிகளின் அடையாளமான வில்வத்தைத் தன் உச்சந்தலையில் தரித்திருப்பதால் திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் தோளில் தரித்துக் கொண்டான் என்பதை,

**“நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி**
**உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி**
**மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து**
**இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு’’**

(**கால்கோள்காதை:** 54-57 )

**கடக்களிறு யானைப் பிடர்த்தலை யேறினன்**
**குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென**
**ஆடக மாடத் தறிதுயிலமர்ந்தோன்**
**சேடங்கொண்டு சிலர்நின் றேத்தத்**
**தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்**

**ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்**

**தாங்கினனாகி—" (கால்கோள்காதை, 60-67)**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இதில் சேரன் செங்குட்டுவன் சிறந்த சிவபக்தனாக விளங்குவதையும் அவனது சிவவழிபாடு குறித்தும் ஆசிரியர் தெளிவுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் சேரன் சிவபெருமான் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, யானைமேல் ஏறினான் என்றும் மட்டும் இளங்கோ பாடியிருப்பின் அது பொருத்தமுடையதாக இருந்திருக்கும்.

திருமால் கோயிலுக்கு அரசன் செல்லவில்லை என்பதே அவன் திருமால் வழிபாட்டில் நாட்டம் செலுத்தவில்லை என்பதை அறிவிக்கின்றது. அவ்வாறு இருந்தும் திருமால் பிரசாதத்தை ஒரு சிலர் கொண்டு சென்று யானை மேல் இருப்பவனுக்குக் கொடுத்தார்கள் என்று கூறாது நீட்டினார்கள் வாங்கிக் கொண்டான் என்று கூறுவது ஏன் என்பது சிந்தித்தற்குரியதாகும். அதோடு மட்டுமல்லாது சிவபெருமான் திருவடி தலைமேல் இருப்பதால் இப்பிரசாதத்தை வாங்கிக் தோளில் தரித்துக் கொண்டான் என்று ஆசிரியர் பாடுவது சிவபெருமானின் சிறப்பை மிகுத்துக் கூறவேண்டும் என்பதற்காகவும், ஆசிரியருடைய ஆழ்மனத்தில் சிவபெருமான் மீதிருந்த உள்ளார்ந்த சிறப்பை எடுத்துக் கூறுவதற்கும் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் எனலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## சிலம்பில் கோயில் வழிபாடும் கோட்ட வழிபாடும்

கோட்டத்தில் வேள்விச்சாந்தி நிகழ்த்தினால் அது கோயில் என்று அழைக்கப்பட்டது. வேதமரபை மீறும்போது மீண்டும் கோட்டம் என்றே வழங்கினர். செங்கோட்டுயர்வரையில் மலைமகளிர் கண்ணகியை வணங்குவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். அவர்கள் தொண்டகம் தொட்டு; சிறுபறை தொட்டு; கோடுவாய் வைத்து; கொடுமணி இயக்கி; குறிஞ்சி பாடி; நறும்புகை எடுத்து; பூப்பலி செய்து; காப்புக் கடை நிறுத்தி; விரவுமலர் தூவிப் பரவினர். (சிலப்.- குன்றக்குரவை- அடி.- 11-22) அவர்கள் வழிபாடு செய்த இடத்தை மாடலன் மங்கலமடந்தை கோட்டம் என்று சுட்டுகிறான். (சிலப். - வரந்தரு காதை - அடி.- 58&88) மலைவளம் காணவந்த செங்குட்டுவன் கண்ணகி வரலாற்றை அறிந்து; இமயக் கல்லெடுத்துக்; கங்கையில் நீர்ப்படை செய்து; நூல்நெறி மாக்கள் பாற்பட வகுத்த பத்தினிக் கோட்டத்தில் நடுகல்லாக்கிக்; கடவுள் மங்கலம் செய்தான். (சிலப்.- நடுகற் காதை- அடி- 224) பின்னர் மாடலமறையோன் அறிவுறுத்த நூன்மரபின் படி வேள்விச்சாலை அமைத்துத் தீமுறை செய்தான். வேள்வியும் விழாவும் நாள்தோறும் வகுத்துக் கடவுள் மங்கலம் செய்தான். அவ்விடத்திற்கு தேவந்தியும், ஐயையும், காவற்பெ ண்டும், வந்து சேர்ந்த பொழுது;

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

"கோமகள் தன் கோயில்" என்கிறார். (சிலப்.- வாழ்த்துக் காதை- உரைப் பாட்டுமடை) ஆனால் வேள்வி முடிந்து; கண்ணகி காட்சியளித்து; வாழ்த்தி; வரம்தந்த பின்னர்; வேதமரபினின்று மாறுபட்டுச் செங்குட்டுவன் தேவந்தியை அங்கே தங்கி நித்தல் விழாவணி நிகழ்த்திப் பலிபூசை செய்ய ஏவியபோது; "பத்தினிக்கோட்டம்" (சிலப்.- வரந்தரு காதை- உரைப்பாட்டு மடை) என்றே சுட்டுகிறார். இதனால் வேதமரபு பின்பற்றப்படும் போது மட்டும் கோட்டம் கோயில் என்று அழைக்கப்படுவது கண்கூடு.

## கோட்டங்களுக்கு உரிய மரபுகள்

கோட்டங்களில் தெய்வக் கோலத்தை மானிடர்க்குப் புனைந்து வழிபடும் வழக்கமும், வரிப்பாடல்கள் பாடிக் குரவைக்கூத்து ஆடும் வழக்கமும், தெய்வமேறி ஆடும் நடைமுறையும் இருந்தன. எயினர் குடியிருப்பில் இடம்பெறும் ஐயைகோட்டத்து வழிபாட்டில் சாலினி தெய்வமேறி ஆடுகிறாள். (சிலப்.- வேட்டுவவரி- அடி.- 4-74) கண்ணகியைக் குடமலையாட்டி என்று சுட்டிப் பேசி வருவதுரைக்கிறாள். அவ்வமயம் எயினர் வேட்டுவவரிப் பாடல்கள் பாடி ஆடினர். செங்கோட்டுயர்வரையில் மங்கலமடந்தை கோட்டத்தில் மலைநாட்டுப் பெண்கள் குன்றக்குரவை ஆடி முருகனையும், வள்ளியையும், கண்ணகியையும் வழிபட்டனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**கொற்றவையும் உமையம்மையும்**

வேட்டுவ வரியில் கொற்றவையை தனிப்பட்ட சொற்களால் இளங்கோ புகழ்வதும், உமையம்மையைப் புகழ்வது போன்று உள்ளது. காடுகாண் காதையில் வசந்தமாலை வடிவில் வந்த சிறுதெய்வத்தை வெருட்டக் கோவலன் பாய்கலைப் பாவை மந்திரத்தைப் பயன்படுத்துகின்றான். இங்கு இளங்கோ குறிப்பிடும் பாய்கலைப்பாவை கொற்றவையாகும். சங்க இலக்கியங்களில் வரும் காடுகிழாள் என்றும் கொற்றவை என்றும் வரும் தெய்வம் போரில் ஈடுபடுபவர்க்கு வெற்றி வாய்ப்புத் தரும் தெய்வமாகவே பேசப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இளங்கோவடிகள் குறிக்கும் கொற்றவை சிவபெருமானின் இடப்பக்கம் உறைபவளாகவும், உமையம்மையின் இலக்கணங்களைப் பெற்றவளாகவும் பேசப்படுவது நோக்கத்தக்கது. அடிகள் கூறும் மதுராபதித்தெய்வமும் உமையொரு பாக வடிவத்தையே வருணிப்பதாக உள்ளது. இவை அனைத்தும் சைவ சமய வழிபாட்டின் கூறுகளாகக் கொள்ளலாம்.

சிலம்பில் செஞ்சடைக்கடவுளான சிவபெருமானும் செஞ்சடை வானவன், பிறவாயாக்கைப் பெரியோன், நிலவுக்கதிர் முடித்த நீலிருஞ்சென்னி, உலகுபொதி உருவத்து உயர்ந்தோன் என்றெல்லாம் குறிக்கப்பட்டு அவன் ஆடுகின்ற கொடுகொட்டி, கூத்து வகைகளும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மதியினைப் சூடியமை நஞ்சுண்டகண்டம் கருத்தமை, சூலாயுதம் ஏந்தியமை போன்ற தோற்றப் பொலிவுகளும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புகளாகச் சிலம்பில் காணப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன், மிகச் சிறந்த சைவ பக்தனாக விளங்கியது சிறப்பிற்குரிய ஒன்றாகும். சைவ சமயத்தின் வினைக் கோட்பாடும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் வெறும் காப்பியம் அல்ல; அது தமிழரின் **சமய வரலாறு**, **வழிபாட்டு மரபு**, **அற நெறி** ஆகியவற்றின் களஞ்சியமாகும். இயற்கை வழிபாடு முதல் பெண் தெய்வ வழிபாடு வரை, மனிதனை அறத்துடன் வாழ வழிகாட்டும் தத்துவ நூலாக இது திகழ்கிறது. பண்டைத் தமிழகத்தில் கோயில் வழிபாடு வேதமரபைப் பின்பற்றி அமைந்தது என்றும்; கோட்ட வழிபாடு பிற வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டிருந்தது என்றும் புலப்படுகிறது.

## துணைப் புரிந்த நூற்பட்டியல்

1. இளங்கோவடிகள் – சிலப்பதிகாரம்
2. மு. வரதராசனார் – தமிழர் பண்பாடும் தத்துவமும்
3. நா. வானமாமலை – தமிழர் வழிபாட்டு மரபுகள்
4. சு. வே. சுப்பிரமணியன் – சிலப்பதிகார ஆய்வு